1979 மார்ச் 7]

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி.

*வினா எண். 264—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திரு. தேவநேயப்பாவாணரின் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியீட்டுப்பணி தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செந்தமிழ் சொற் பிறப்பியல் அகர முதலியின் முதல் மண்டல முதற்பகுதி, காலிப் பட்ட அளவில் (Foolscap size) 1,300 பக்கங்கள் தட்டச்சடிக்கப்பட்டு அச்சிற்கு அணியமாயிருக்கின்றது. அச்சிடும் பொருட்டு அச்சகங்களிடமிருந்து மதிப்பீடுகள் கோரப் பட்டுள்ளன.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாவாணர் அவர்களுக்கு வயது அதிகமாகிவருகிறது, ஆகவே இந்த வேலையை விரைந்து செயல்படுத்தி முடித்தால், சிறப்பான இந்த வேலைக்கு அவருக்கு அரசு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து, இப்பணியை விரைவில் செய்து முடிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பாவாணர் அவர்களே இதற்கு 12 ஆண்டு காலமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். திட்டமிட்டபடி பணிகள் நடைபெறுவதற்கு அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

கரூர் அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண். 265—திரு. கு. வடிவேல்: மாண்புமிகு கல்வித் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கரூரில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் மேல் பட்டப் படிப்பு வகுப்புகள் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும் ?